# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி



# தூது

நற்செய்தி துணுக்குகள்



டிசம்பர் 2023 (மடல் – 23) செய்தி - 11

**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி."**

**யோவான் 1:9**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 8 |
| Children's Corner | 12 |
| வேத வினாக்கள் | 23 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 30 |

# ஆயர் மடல்

**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான் 1:9).**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மை பாதுகாத்து வழிநடத்திவந்த ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன்.குறிப்பாக நமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகையை மகிழ்ச்சியோடு கொண்டாட ஆண்டவர் கிருபை செய்தார், ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்தத் திருப்பணிக்காக இரவு பகலாக உழைத்த, ஜெபித்த, கொடுத்த அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். சிறப்பாக ஆண்டவருக்காக மதிப்பு மிக்க பொருட்காணிக்கைகளைப் படைக்கவும், ஒருநாள் வருமான ஸ்தோத்திர காணிக்கைகளைப் செலுத்தவும், உற்சாகமாக stalls அமைக்கவும், சிறு குழந்தைகள் உற்சாகமாக விளைவின் பலனை கொண்டுவந்து படைக்கவும் கிருபை செய்த ஆண்டவரைத் துதிக்கிறேன். மகிழ்ச்சியோடு பங்குபெற்ற உங்கள் யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அட்வெந்து காலங்களுக்குள் பிரவேசித்திருக்கிறோம். கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முந்தைய நான்கு வாரங்களை அட்வெந்து வாரங்கள் என்று அழைக்கிறோம். **அட்வெந்து** (Advent) என்கின்ற வார்த்தை **Advantus** என்கின்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது. இதற்கு வருகை (Coming (or) Arrival) என்று பொருள். **பருஸியா** (Parousia) என்கின்ற கிரேக்க வார்த்தையும் பயன்படுத்தப்படுகிறது. திருச்சபை ஆண்டு (Church Calendar) அட்வெந்திலிருந்து ஆரம்பமாகிறது. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையாகிய கிறிஸ்மஸ் பண்டிகையை மகிழ்ச்சியோடு கொண்டாடுவதோடு, இயேசு கிறிஸ்து இராஜாவாக வருகின்ற இரண்டாம் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து, அதற்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளுவதற்காகவே அட்வெந்து காலங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**அட்வெந்து வளையம் : (Advent Wreath)**

திருச்சபை ஆண்டு (Church Year) ஆரம்பமாவதை அடையாளம் காட்டுவதற்கு ஆலயத்திலும், வீடுகளிலும், இந்த அட்வெந்து மாலையை வைக்கிறோம். பச்சை நிறமாயிருக்கின்ற (real or artificial) மாலையை வட்ட வடிவத்தில் வைத்து, அதின் நடுவில் உயரமான ஒரு வெள்ளை மெழுகுவர்த்தியும், அதைச் சுற்றி நான்கு மெழுகுவர்த்தியில் மூன்று நீலம் கலந்த சிவப்பு (Purple) நிறமும், ஒரு ரோஸ் (pink) மெழுகுவர்த்தியும் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு மெழுகுவர்த்திரி ஒளியேற்றப்படும். கிறிஸ்து பிறந்த தினத்துக்கு முந்தைய வாரம் ரோஸ் (pink) நிற மெழுகுவர்த்தியும், கிறிஸ்மஸ் அன்று நடுவில் இருக்கின்ற வெள்ளை நிற மெழுமுவர்த்தியும் ஒளியேற்றப்படுகிறது.

பச்சை நிற வட்ட வளையம், செழுமையைக் குறிப்பதோடு, கடவுளின் முடிவில்லாத் தன்மையையும் (Eternity) அவரின் முடிவில்லாத இரக்கத்தையும், (Endless Mercy) காட்டுகிறது. ஆண்டவர் ஆரம்பமும் முடிவும் இல்லாதவர் என்பதையும் அடையாளமாகக் காட்டுகிறது. **ஒளியூட்டப்பட்ட மெழுகுவர்த்தி ஒளியில் ஆண்டவர் உலகின் குமாரனாகப்**

**பிறந்திருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.** நான்கு மெழுகுவர்த்திகள் நான்கு அட்வெந்து வாரங்களை வர்ணிக்கிறது. பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசியான மல்கியா தீர்க்கதரிசியிலிருந்து சுமார் நான்கு நூற்றாண்டுகளாகக் கிறிஸ்துவின் பிறப்புக்காகக் மக்கள் ஆவலோடு காத்திருந்த காலத்தை அடையாளமாகக் காட்டுகிறது. நீலம் கலந்த சிவப்பு (Purple) அரசர்கள் அதிகமாகப் பயன்படுத்தும் நிறம். (Royal colour) இறைமகனான இயேசு கிறிஸ்துவை அரசராக ஏற்றுக்கொண்டு வரவேற்பதைக் காட்டுகிறது. (லெந்து (Lent) கலங்களிலும் நீலம் கலந்த சிவப்பு (Purple) நிறத்தைப் பயன்படுத்துகிறோம். நாம்செய்த பிழைக்கு மனம் வருந்தி உபவாசித்து, துன்பத்தை வெளிப்படுத்துவதை நிறம் அடையாளமாகக் காட்டுகிறது. ஏனெனில், இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் அவரின் துன்பமாகிய சிலுவை மரணமும் அடங்கியிருக்கிறது.)




முதல் அட்வெந்து வாரத்தில் ஒளியூட்டப்படும் மெழுகுவர்த்தி, நம்பிக்கையோடு எதிர்பார்க்கும் மேசியாவைக் குறிக்கிறது. (Candle of Expectation or Hope) மற்ற மூன்று மெழுகுவர்த்திகளும் அன்பு, (Candle of Love) அமைதி, (Candle of Peace) மகிழ்ச்சியைக் (Candle of Joy) காட்டுகிறது. நான்காவது வாரம் ரோஸ் நிற மெழுகுவர்த்தி நம்பிக்கை நிறைவு பெறுவதினால் கிடைக்கின்ற மகிழ்ச்சியைக் காட்டுகிறது. நம்பிக்கையோடு எதிர்பார்த்த மேசியாவாகிய இயேசு கிறிஸ்து பிறக்கிறார் என்கின்ற மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வண்ணமாக, ரோஸ் நிற மெழுகுவர்த்தி ஒளியூட்டப்படுகிறது. நடுவில் இருக்கின்ற வெள்ளை நிற மெழுகுவர்த்தி Christ Candle என்று அழைக்கப்படுகிறது. இது கிறிஸ்மஸ் அன்று ஒளியூட்டப்படுகிறது. ஒளியின் ஆண்டவராக இயேசு கிறிஸ்து பிறந்திருக்கிறார் என்கின்ற செய்தியை சொல்கிறது. இந்த ஒளியூட்டப்பட்ட மெழுகுவர்த்திகள் இயேசுவே உலகத்தின் ஒளி என்பதை நினைப்பூட்டுகிறது. நமது வாழ்வின் இருளை அகற்றிப் புது வாழ்வின் நம்பிக்கை ஒளியாக இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. அதோடு இயேசுவில் ஒளியைப் பெற்றிருக்கிற நாம் பிறருக்கு ஒளி வீசுகின்ற மக்களாக வாழவேண்டும் என்பதையும் நினைவூட்டுகிறது.

எனவே உலகத்தின் ஒளியாக வந்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடயிருக்கின்ற நாம், அவரில் பெற்ற ஒளியை, இந்த உலகத்தில் பிரதிபலித்துக்காட்டி, சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்துகாட்ட அழைக்கப்பட்டிருக்கிறோம். (மத்தேயு 5:16) கிறிஸ்மஸ் பண்டிகை கால சிறப்பு ஆராதனைகள் அனைத்திலும் உற்சாகமாக பற்கு பெறும்படி அன்புடன் அழைக்கிறேன்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்!**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
Rev. Dr. A. Samuel

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நமது குடும்பத்தையும் அற்புதமாக பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம், குறிப்பாக கிறிஸ்மஸ் பண்டிகை மற்றும் புதிய ஆண்டின் கொண்டாட்டங்கள் நமக்கும் நம்முடைய குடும்பத்தினருக்கும் ஆசிர்வாதமாக இருக்க ஆண்டவர் அருள் செய்வாராக.

**கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார், அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது (சங்கீதம் 11:7).**

ஆண்டவர் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும் என்பதை இந்த சங்கீதம் நமக்கு கற்றுத் தருகிறது. ஆண்டவரை நமது வாழ்வின் எல்லா சூழலிலும் சிக்கென்று பிடித்துக்கொள்ளவேண்டும் என்று நம்மை பணிக்கிறது. இந்த சங்கீதத்தின் தலைப்பு, இசை அமைப்பதற்காக இராக தலைவனிடம் ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாகவே தாவீதின் சங்கீதம் என்று சொல்லப்படுகின்ற அனைத்து சங்கீதங்களும் தாவீதால் எழுதப்பட்டவை அல்ல. சில சங்கீதங்கள் தாவீதால் எழுதப்பட்டவை, சில சங்கீதங்கள் தாவீதின் பெயரால் எழுதப்பட்டவை, சில சங்கீதங்கள் தாவீதின் வாழ்வில் நடந்த சம்பவங்களை மனதில்கொண்டு எழுதப்பட்டவைகள். இவைகள் அனைத்தும் தாவீதின் சங்கீதம் என்றே அழைக்கப்படுகிறது.

இந்த சங்கீதம் பாடப்பட்ட சூழல், சவுல் அரசனால், தாவீது துரத்தப்படுகிறார் சவுலுக்குப் பயந்து தாவீது, ஓடி, ஓடி களைத்துப்போனார். இவ்வாறு சோர்ந்து போய் மனம் தளர்ந்துபோன நிலையில், தாவீது, ஆண்டவர் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு இந்த சங்கீதத்தைப் பாடியிருக்கலாம் என்கின்ற கருத்தும் சொல்லப்படுகிறது. குறிப்பாக 1சாமுவேல் 19ஆம் அதிகாரத்தை மையமாக வைத்து இந்த சங்கீதத்தை எழுதி இருக்கலாம் என்கின்ற கருத்தும் உள்ளது. சிலர் ஆலயம் பற்றிய குறிப்பு இடம் பெறுவதால், எருசலேம் ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட பின்புதான் இந்த பாடல் தோன்றியிருக்கவேண்டும் என்றும் எண்ணுகிறார்கள்.

இந்த சங்கீதத்தை நாம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. **நெருக்கடியான சூழலில் பக்தனின் உள்ள உணர்வு:** (சங்கீதம் 11:1-3)

சோதனைகளும் துன்பங்களும் அனைவருடைய வாழ்விலும் வருகிறது. நமது வாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்கிறது. யோபு செல்கிறார் **ஸ்திரீயிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாய் இருக்கிறான்** என்கிறர். இந்த துன்பங்களால் பலவேளைகளில் நமது விசுவாசம் சோதனைக்குள்ளாக்கப்படுகிறது. இதற்கு பல காரணிகள் நம்மை சுற்றி இருக்கிறது. குறிப்பாக நமது நண்பர்கள், நமது உறவுகள், தவறான ஆலோசனைகள் ஆகிய காரணிகள் ஆண்டவர் மீது நாம் வைத்திருக்கினற நம்பிக்கையை தளர்ச்சியடையச் செய்கிறது.

சங்கீதக்காரனுக்கும் இதைப்போன்ற சூழல் ஏற்படுகிறது. கர்த்தரை நான் நம்பி இருக்கிறேன், ஆனால், நீங்கள் என்னிடம், பறவையைப் போல மலைக்கு பறந்தோடிப் போ என்கிறீர்கள். இங்கு **நீங்கள்** என்று யாரை சொல்கிறார் என்பது நமக்குத்

தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஒருவேளை நண்பராக இருக்கலாம் அல்லது அவருக்குள்ளே இருக்கின்ற அச்சம், திகில், பயம் அதைக் குறித்து அவருடைய மனதோடு பேசி இருக்கலாம். பிரச்சனைகள் எல்லா பக்கத்திலிருந்து உன்னை நெருக்கம் பட்சத்தில், **எங்கேயாவது தூரமாய் ஓடிப்போய் அடைக்கலம் புகுந்து கொள் என்று அவனை பயங்காட்டி இருக்கலாம்.** ஏனெனில், எதிரி மிக அருகில் இருக்கிறாரன். அதுவும் எதிரி சாதாரண நபர் அல்ல, அவன் ஒரு அரசன். வேட்டையாட தயாராக இருக்கிறான் என்கின்ற உணர்வை ஏற்படுத்துவதின் வழியாக ஆண்டவர் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை சிதைக்கிறான். ஆனால் எந்த சூழலிலும் ஆண்டவர் மீது நாம் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதை இரண்டாவது பகுதியில் உறுதிப்படுத்துகிறார்.

**2. நெருக்கடியான சூழலில் ஆண்டவர் மீது சங்கீதக்காரன் வைத்திருக்கின்ற ஆழ்ந்த விசுவாசம் (சங்கீதம் 11:4-7)**

நான் ஏன் பறவையைப் போல மலைக்கு பறந்தோடிப் போகவேண்டும்? நான் பயந்து எங்கேயும் ஓடிப்போகவேண்டிய அவசியம் இல்லை, எனெனில் என் ஆண்டவர் வீற்றிருக்கின்ற திருக்கோயில் இங்கு இருக்கிறது, அங்கு நான் அடைக்கலம் புகுவேன். என் துன்பத்தில் எனது ஆண்டவர் துரத்திலிருப்பவர் அல்லர். அவர் எனக்கு நெருக்கமானவர். ஒருவேளை அவரின் இருப்பிடம் விண்ணகமாக இருந்தாலும், அவரின் கண்கள் என்னை உற்று நோக்குகிறது என்கிறார். (vs.4) நான் அவர் மீது ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவன் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

அதே வேளையிலே, தன்னை எதிர்க்கின்ற தீயோன் நிலைமையும் சுட்டிக்காட்டுகின்றார். தீமை செய்பவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் அவர் அழுத்தமாக சொல்லுகின்றார். (vs.5,6) ஆண்டவருடைய கோபமும் தீயோன் மீது இருக்கிறது என்கிறார். அதேவேளையில் ஆண்டவர், நீதி செய்கின்ற மக்கள் பக்கமாக தம்முடைய முகத்தை திருப்புகிறார். (vs.7) ஆண்டவரின் கண்கள் என் மீது நோக்கமாய் இருக்கிறபடியால் என் துன்பங்கள் அவருக்கு நன்றாக தெரியும். ஆகவே நான் பயப்பட வேண்டிய அவசியமில்லை என்கிறார். ஆண்டவர் மீது நாம் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால் நிச்சயமாக ஆண்டவர் நம்மை பாதுகாப்பார். ஒருவேளை நம்மை சுற்றி இருக்கின்ற காரணிகள் நம் விசுவாசத்துக்கு தடைகளாக இருக்கலாம். ஆனால் எல்லா சூழலிலும் ஆண்டவர் மீது நாம் நம்பிக்கை வைக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**அனைவருக்கும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

***மீட்பரின் பணியில்***
***Mrs. S. ஜெபா சாமுவேல்***
**ஆயரம்மா**

## மீட்பரின் வருகை

*"காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்" என்று பவுல் கலா.4:5-ல் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். இயேசுகிறிஸ்து இவ்வுலகில் உதிப்பதற்கு முன்னதாக ஏறத்தாழ 400 ஆண்டுகள் இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்திலே அமைதி நிறைந்த நாட்களாயும் இருண்ட காலமாயும் காணப்பட்டது. ஏனென்றால், அந்த காலகட்டத்தில் தேவனிடமிருந்து மக்களுக்கு எந்தவொரு வார்த்தையும் கிடைக்கவில்லை, எந்தவொரு தீர்க்கதரிசியும் எழும்பவில்லை. அந்நாட்களின் முடிவில் யூத மக்கள் ரோமர்களினால் அடிமைப்பட்டிருந்த அந்த வேளையில் தேவன் தமது கால கடிகாரத்தின்படி செயலாற்ற ஆரம்பித்தார். தங்களை அடிமைத் தனத்திலிருந்து மீட்க ஒரு மேசியா வெளிப்படுவார் என இஸ்ரவேலர் எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் எதிர்பார்ப்பின்படியே, மனுக்குல முழுவதையுமே பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்படியாக தேவகுமாரன் மனுஷகுமாரனாக பரலோகத்தை விட்டிறங்கினார்.*

***1.சரியான காலத்திலே ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே வந்தார்.***

*வேதத்தை வாசித்துப் பார்ப்போமென்றால் அவர் எல்லாவற்றையும் அந்தந்த காலத்திலே நேர்த்தியாய் செய்கிறவராக இருக்கிறார். பழைய ஏற்பாட்டிலே நாம் வசனத்தை வாசிப்போமென்றால், "அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்" (பிரசங்கி 3:11). குமாரனாகிய இயேசுவின் வாழ்விலும் அந்தந்த காரியங்கள் அந்தந்த காலத்திலே செய்யப்பட்டிருக்கிறது. இயேசுவானவர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக உலகத்திற்கு வந்தது சுயத்தின் அடிப்படையிலோ, தற்செயலாகவோ, அல்லது ஏனோதானோ என்பதான முறையிலோ அல்ல; அது முன்குறிக்கப்பட்டது, திட்டமிடப்பட்டது. காலம் நிறைவேறினபோது சரியான காலத்திலே இயேசு வந்தார். அவர் பிறந்த காலம் அரசியல் ரீதியாக சரியான காலம், கலாச்சார ரீதியாகவும் சரியான காலம், அதேசமயம் அவருடைய வார்த்தை தீவிரமாய் செல்வதற்குரிய ஒரு அமைப்பு ரீதியாகவும் சரியான காலமாயிருந்தது. ஆகவே வேதம் குறிப்பிடுகிறபடி காலம் நிறைவேறினபோது இயேசு கிறிஸ்து வந்தார்.*

***2. சரியான பரிசாக ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே வந்தார்.***

*இந்த உலகத்தில் இருக்கும் எல்லா வெகுமதியைக் காட்டிலும் சிறந்த வெகுமதி யார் தெரியுமா? நம்முடைய ஆண்டவராகிய இயேசுவானவர் தான். தேவன் "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8:32). உலகத்திற்கு தேவாதி தேவன் கொடுத்த பெரிய வெகுமதி தம்முடைய சொந்தக் குமாரனாகிய இயேசுவானவர். அவரையே நமக்குத் தரும்போது அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் தராமலிருப்பதெப்படி?*

***3. சரியான நோக்கத்திற்காக இயேசு இவ்வுலகில் பிறந்தார்.***

*நியாயப்பிரமாணத்தின் கீழேயும் பாவத்திலேயும் அடிமைப்பட்டிருந்த மனிதனை விடுவிப்பதற்காகத்தான் இயேசு கிறிஸ்து வந்தார். அற்புதங்களுக்கும், அடையாளங்களுக்கும் மாத்திரம் என்று எண்ணிவிடக் கூடாது. இவைகள் எல்லாம் சாதாரணமானவை. மக்கள் முக்கியமானதை சாதாரணமாக்கி விட்டார்கள்.*

சாதாரணமானவைகளை முக்கியமாக்கிவிட்டார்கள். உலகத்திலிருக்கும் எத்தனையோ அற்புதங்களிலே சிறந்த அற்புதம் எதுவென்றால், ஒரு மனிதன் பாவத்திலிருந்து விடுதலையடைந்து, ஆண்டவருடைய பிள்ளையாக மாறுவதுதான்! மீட்பராகிய அவரை சந்திக்கும் அனுபவம் நம்முடைய வாழ்வில் வரும் பொழுது இருளில் இருக்கிற நமது வாழ்வை அவர் வெளிச்சமாக மாற்றுவார். "அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், (லூக்கா 1:78,79) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வந்திருக்கிறார் என்று எழுதப்பட்டு இருக்கிறது.

பிரியமானவர்களே, உங்களை சந்திக்கும்படியாக வந்த இயேசு கிறிஸ்துவை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்தித்து விட்டீர்களா? அப்படி ஒரு வேளை நீங்கள் இன்னும் சந்திக்காமல் இருந்தால் மீட்பரின் வருகையை நினைவு கூர்ந்து கொண்டிருக்கும் இந்த நாட்களில், அவரை சந்திக்கும் படியாக விரும்பி வாருங்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இந்த உலகத்தில் மனிதர்களாகிய நம்மை மீட்கும் படியாக பிறந்த இயேசு கிறிஸ்து, இன்றைக்கும் உங்கள் இல்லத்திற்கு வர விரும்புகிறார். உங்கள் உள்ளத்திற்குள் வர விரும்புகிறார்.

ஆகவே இந்த கிறிஸ்துமஸ் காலங்களில் மீட்பின் அனுபவத்தோடு, மெய்யான ஒளியாகிய அவருடைய வெளிச்சத்தில் நடக்கிற பிள்ளைகளாக நம்மை மாற்றிக்கொள்ளுவோம். ஆண்டவர் தாமே அப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை நம் ஒவ்வொருவருக்கும் தந்து ஒரு புதிய நம்பிக்கையோடு புத்தாண்டில் பிரவேசிக்க நம்மை நடத்துவாராக ..ஆமென்

உலக இருளை ஒழித்திடும் ஒளியாய்
உதித்த நம் இயேசு பிரான் - பாவ
அலகை வழியை அழித்திடும் வழியை
அளித்த நம் இயேசு பிரான் ...!!

மந்தைகள் நடுவில் மரியின் மடியில்
மலர்ந்த நம் இயேசு பிரான் ..!! -சிந்தை
மகிழ்ந்திட மந்தையர் மலர்ந்தே பணிந்திட
மகிழ்ந்த நம் இயேசு பிரான் ..!!!

இறைவன் நம்மோடு இம்மானுவேல் என்றே
மறை சொன்ன நாமம் அவர் --ஜனத்தின்
மறையா பாவக் கறை நீக்கி மகிழ்விக்கும்
குறை இல்லா நேசம் அவர் ..!!

கிழக்கின் அறிஞர்கள் விளக்கின் வழியிலே
இலக்கை அடைந்து நின்று - யூத
குலத்தின் அதிபதி நிலத்தில் பிறந்ததை
பணிந்து மகிழ்ந் தனரே ..


மண்ணில் மலர்ந்திட்ட விண்ணக பூவிற்கு
மனதில் இடம் கொடுப்போம் - மரியின்
மடியில் தவழ்ந்திட்ட மழலை நேசர்க்கு
மனதில் வழி திறப்போம் ..!!!

கிறிஸ்துவில் அன்புடன்,
**Jayachandra Raja**

# பெண்கள் பகுதி

## நித்திய மகிழ்ச்சி

நீதிமன்றத்தின் உத்தரவின்படி சிறையில் அடைக்கப்பட்ட ஒருவன், தன் தண்டனைக் காலம் முடியும் வரை சிறையில் இருக்கவேண்டும். பல நாட்களோ, மாதங்களோ, வருடங்களோ தன்னுடைய தவறுக்கேற்ப அவன் தண்டனை அனுபவிக்க வேண்டும். ஒரு வேளை மரணத்தண்டனைக்கு உரியவனாக இருந்தால் அவன் மரித்தாக வேண்டும். அவன் வாழ்க்கை எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாது சடிதியாக முடிந்துவிடும். பாவத்தில் வாழும் மனிதனுடைய வாழ்க்கையும் இத்தகைய பரிதாபத்துக்குரிய வாழ்க்கைதான். தன் பாவத்தின் பலனை ஒவ்வொரு மனிதனும் அனுபவித்தாகவே வேண்டும். பாவமானது மனிதனின் சந்தோஷத்தை அவனை விட்டு எடுத்துப்போடுகிறது. நிம்மதியற்ற வாழ்க்கைக்கு தள்ளப்படுகிறான். இந்த பரிதாபமான நிலையைக் கண்ட பரம பிதா தன் ஒரே ஒரு குமாரனை இவ்வுலகுக்கு அனுப்பி, அவருடைய ரத்தத்தினாலே நமக்கு பாவ மன்னிப்பாகிய ரட்சிப்பை கொடுத்திருக்கிறார். இயேசுவின் முதலாம் வருகை நம்முடைய பாவ சுபாவத்தை மாற்றி, நமக்கு புது வாழ்வை மீட்பின் மூலம் கொடுத்துள்ளது.




### வறண்டு போன வாழ்க்கை

இரட்சிப்பை பெற்ற நம் வாழ்க்கை எப்போதும் சுகமாக இவ்வுலகில் போவதில்லை.


- அநேக நேரங்களில் நம் வாழ்க்கை வறண்ட பாலைவன வாழ்க்கையாக மாறிவிடுகிறது.
- கைகள் தளர்ந்து போகிறது. முழங்கால்கள் பெலனற்று போகிறது.
- மன அமைதியிழந்து மனம் பதற்றமடைகிறது. நாம் செய்யும் காரியங்கள் வாய்க்காதே போகிறது.
- எங்கு பார்த்தாலும் வெட்டாந்தரையும், வறண்ட நிலமுமாய் தெரிகிறது.
- நம்மைத் தீண்டும் மக்கள் கூட்டம் சூழ்ந்து கொள்கிறது.
- போகும் வழி அறியாது, திசை கெட்டுப் போகிறது.
- கெர்ச்சிக்கிற சிங்கம் போல நம்மை விழுங்கப்பார்க்கிற, விழத்தள்ளுகிற மக்களும், காரியங்களும் எதிர்நோக்கி வருகிறது.

இத்தகைய சூழ்நிலைகள் அனைத்தும் நமக்கு ஒருமித்து உண்டாகாவிட்டாலும், இப்படிப்பட்ட அநேக காரியங்கள் நம் வாழ்வில் அடிக்கடி ஏற்பட்டு நம்மை சோர்வடையச் செய்கின்றன. இவையனைத்துக்கும் உரிய விடையை ஏசாயா 35-ம் அதிகாரத்தில் காண முடிகிறது.

## செழிப்பான தண்ணீர் தடாகமான வாழ்க்கை

இந்த அதிகாரம் முழுவதும், மீட்பரின் வருகையில் உண்டாகும் மாற்றங்களை அழகாக எடுத்துக்காட்டுகிறது. அதாவது :

- ✓ வறண்ட நிலம் செழிப்பாக மாறும் (வச.1-2)
- ✓ திடனற்ற கைகளும், தள்ளாடுகிற முழங்கால்களும் பலப்படும் (வச.3)
- ✓ பதறுகிற மனம் திடனடையும் (வச.4)
- ✓ குருடான கண்களும், செவிடான செவிகளும் திறக்கப்படும் (வச.5). கர்த்தரைக் காணாத கண்களும், அவர் வார்த்தையைக் கேளாத செவிகளும் திறக்கப்படும்.
- ✓ முடவன் மானைப்போல குதிப்பான். ஊமையனின் நாவு கெம்பீரிக்கும் (வச.6). ஒன்றும் வாய்க்காது முடங்கி கிடந்த மனிதன் செழித்து மகிழுவான்.
- ✓ கர்த்தரின் நாமத்தை அனைத்து உதடுகளும் அறிக்கை செய்யும்.
- ✓ தண்ணீரற்ற, வறண்டு போன இடத்தில் ஆறுகளும், நீரூற்றுகளும் உண்டாகும் (வச.7). வாழ்க்கையில் வறண்டு போன, சாத்தியமே இல்லாத காரியங்களும், அதிசயமாக நன்மையாக ஏற்ற நேரத்திலே நடைபெறும்.
- ✓ வழி இல்லாத அடைபட்ட இடத்தில் பெரும்பாதையான வழி உண்டாகும் (வச.8). அது சாதாரணமான வழி அல்ல. மிகவும் பரிசுத்தமான வழி. திசை தெரியாத தவறான வழியில் ஒருவனும் செல்வதில்லை. அவ்வழியில் செல்பவனை பயப்படுத்தி, மனம் பதறும்படி செய்ய எந்தக் கொடியவனும் சிங்க்த்தைப் போல வருவதில்லை.



ஆக, கர்த்தரின் ரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் அனைவரும் ஆனந்தக்களிப்புடன் பாடி நித்திய நித்தியமாய் சந்தோஷமாய் ஆண்டவரோடு பரலோகில் வாழும் பாக்கியத்தை பெறுவார்கள். சஞ்சலமும் தவிப்பும் அவர்களை விட்டு ஓடிப்போய், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அவர்களை ஆட்கொள்ளும் (வச.10).

இத்தகைய பாக்கியமுள்ள வாழ்க்கையை, பெரும் பாக்கியத்தை நமக்கு தருவதாக மீட்பர் வாக்கு பண்ணியிருக்கிறார். இயேசுவின் முதல் வருகையைக் கொண்டாடும் நாம், நம் மீட்பர் வாக்குப்பண்ணியிருக்கும் சந்தோஷத்தை அடைய வேண்டுமாயின், அவருடைய இரண்டாம் வருகையில் அவரோடு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு பாத்திரமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். நம் கையில் உள்ள தீபத்தில் எண்ணெய் வற்றாது, இராஜாதி ராஜாவை சந்திக்க விழிப்போடு எப்போதும் ஆயத்தமாய் இருப்போம். பரலோக ராஜ்யத்தை சுதந்தரிப்போம். நித்திய மகிழ்ச்சி நம்முடையதாகட்டும்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### காத்திருந்து சுதந்தரித்த அழகிகள்
### [எண். 27:1-11, 36:1-12]
### *மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள்*

இவர்கள் செலோப்பியாத்தின் குமாரத்திகள். செலோப்பியாத், யோசேப்பின் குமாரன் மனோசே கோத்திரத்தில் பிறந்தவன். கர்த்தர் அவனுக்கு ஐந்து பெண் குழந்தைகளைக் கொடுத்து ஆசீர்வதித்திருந்தார். ஐந்து பேரும் அழகும், அறிவும் உடையவர்கள். தன் தகப்பனின் மரணத்திற்கு பிறகு ஆண் வாரிசு இல்லாத சூழ்நிலையில் தன் தகப்பனின் பெயரை தேசத்தில் நிலைப்படுத்தி தங்களின் சுதந்தரவீதத்தை அடைந்தார்கள். திர்சாவின் பெயர், இவர்களுக்கு சொத்து கிடைக்கும் முன்பே, ஒரு அழகிய பட்டணத்திற்கு இடப்பட்டது. இதை யோசுவா 12:24-ல் பார்க்கிறோம். திர்சா இஸ்ரவேல் அரசுக்கு தலைநகரமாயிருந்தது என்று 1ராஜா. 15:33, 16:8-ல் பார்க்கிறோம். உன்னதப்பாட்டு 6:4-ல் சாலமோன், இரவில் காணாமல் போன, தன் கணவனைத் தேடிப்பிடித்த மனைவியை, திர்சாளைப் போல் அழகுள்ளவள் என்று போற்றுகிறான்.

செலோப்பியாத் மரித்தபின்பு, அவனுக்கு ஆண்பிள்ளைகள் இல்லாததால் சுதந்தரவீதம் கொடுக்கப்படவில்லை. இது பெண்பிள்ளைகளுக்கு வருத்தமாக இருந்தது. இதை இந்த ஐந்து பெண் பிள்ளைகளும் அப்படியே விட்டுவிட விரும்பவில்லை. தங்கள் தகப்பனாரின் பெயர், தேவன் தமது ஜனத்திற்கு ஆசீர்வாதமாய் தந்த தேசத்திலே நிலைநிறுத்தப்பட வேண்டுமென விரும்பினார்கள். தங்கள் விருப்பத்தை ஜனத்தின் மூப்பர்களிடம் எடுத்துச் சென்றார்கள். மோசேயிடமும் கேட்டார்கள். மோசே இந்த ஐந்து பெண் பிள்ளைகளின் வேண்டுகோளையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு சென்றான். கர்த்தர் செலோப்பியாத்திற்கு சேர வேண்டிய சுதந்தரத்தை அவர்கள் குமாரத்திகளுக்கு கிடைக்கும்படி செய்வாயாக என்றார். அப்படியே ஆண் வாரிசு இல்லாமல் மரிக்கும் நபரின் சுதந்தரவீதம் அவரின் பெண்களுக்கே சுதந்தரவீதமாய் கொடுக்கப்பட வேண்டும் என்ற புதிய சட்டமும் இஸ்ரவேலருக்கு தேவனால் கொடுக்கப்பட்டது. இந்த ஐந்து பெண் பிள்ளைகளும் ஞானமாய் நடந்து தங்கள் உரிமையை விட்டுக்கொடுக்காமல் தங்கள் தகப்பனுடைய பெயரை தேசத்தில் நிலைப்படுத்தி, தங்களுடைய சுதந்தரவீதத்தை அடைந்தனர்.

ஞானமாய், புத்தியோடு செலோப்பியாத்தின் ஐந்து பெண்களைப் போல விழிப்புடன் நடந்து, இவ்வுலக வாழ்க்கையில் இயேசு நமக்கு சம்பாதித்து அருளிய

விலையேறப்பெற்ற இரட்சிப்பைப் பெற்று அதில் நிலைத்திருந்து, நித்திய ராஜ்யத்தின் சுதந்தரத்தை அடைய வேண்டும்.

கர்த்தரே நமது சுதந்தரமும் பங்குமானவர். தேவன் நமக்கு அருளும் சுதந்தரம் அழியாதது, மாசற்றது, வாடாதது, நமக்காக தேவன் அதை வைத்திருக்கிறார் இந்த ஐந்து குமாரத்திகளைப் போல ஞானமாய் நடந்து உரிமை பாராட்டி நித்திய வாழ்வின் சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ள கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

## ஜனவரி மாத தலைப்பு

# புதிய ஆண்டில் புதிய பயணம்

# [New Journey in New Year]

Dear Children,

The theme this December is "**ADVENT OF THE REDEEMER**".

The word 'Advent' stems from a Latin word that means "coming" or "arrival."



The Advent season reminds us about the importance of Christ in our lives, prepares us to celebrate Christ's birth at Christmas, and refers to his second coming at a future time.

## JESUS, OUR REDEEMER

Jesus came to earth to do our Father's will. He came with the knowledge that He would bear the burden of the sins of us all.




He was born to be the Savior and Redeemer of all mankind.

He was **ABLE** to accomplish His mission because He was the Son of God and He possessed the power of God.

He was **WILLING** to accomplish His mission because He loves us.



## JESUS-SON OF MAN; and SON OF GOD

## THE PERFECT SACRIFICE

Jesus needed to be fully human in order to take our place at the sacrifice – to be paid for our sins.

But he needed to be fully God in order to be Perfect, Pure, without blame, and for God's justice to be completely and eternally satisfied.

## JESUS CAME TO FULFIL PROPHECY

The prophet Isaiah prophesized a long time ago about the coming of Jesus.
https://www.youtube.com/watch?v=1ZR7z4zlyXk





## THE FATHER's PLAN FOR REDEMPTION (SONG)


https://www.youtube.com/watch?v=xzP6Z2AINEc




## SAYING IT WITH PICTURES...





And there were shepherds living out in the fields nearby, keeping watch over their flocks at night. An angel of the Lord appeared to them, and the glory of the Lord shone around them, and they were terrified. — LUKE 2:8–9 NIV




But he continued, "You are from below; I am from above. You are of this world; I am not of this world. I told you that you would die in your sins; if you do not believe that I am he, you will indeed die in your sins." – JOHN 8:23–24 NIV


## TINY TOTS SECTION

### COLOR IN...




## JESUS was born 2000 years ago.

Mary (his mother) and Joseph (his Father) laid him in a manger.




Wise Men Came from Afar, To Visit Baby Jesus Was He Was Born!



# The Shepherds Also Came to The Place Where Jesus Was Born!!

## The Shepherd's Story Spot the Differences

Compare the picture on the top with the picture on bottom. Circle **10** things that are different.





# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "WHAT CHILD IS THIS…"

1. Why were Joseph and Mary traveling so close to her due date?

a. To celebrate Passover. b. To register for taxes.
c. To buy food during a famine. d. To see a doctor.

2. Why was Jesus born in a stable?

a. Joseph couldn't afford a hotel. b. They enjoyed an adventure.
c. To ensure their donkey wasn't stolen. d. There was no room in the inn.

3. Why did Mary and Joseph name their baby Jesus?

a. An angel told them to. b. It was a popular name.
c. It was an old family name. d. The Priest chose that name.

4. What does the name Emanuel mean?

a. "Jesus" in Hebrew b. "God with us"
c. "Led by the Lord" d. "God is well Pleased"

5. Who told the shepherds where they could find the baby Jesus?

a. The Wise men. b. The people in town.
c. The Angels. d. All of the above.

6. How did the wise men know where to find the Christ child?

a. They saw the place in a dream. b. An angel told them.
c. They followed a star. d. They followed the Shepherds.

7. What gifts did the wise men bring to baby Jesus?

a. Gold and silver. b. Honey, dates and bread.
c. Gold, Frankincense and Myrrh. d. Turtle doves and a Partridge.

8. Whom did the wise men tell Herod they were seeking?

a. The King of the Jews. b. The Enlightened One.
c. The only Son of God. d. The Long Awaited Messiah.

9. Herod asked the wise men to let him know when they found baby so he could…

a. Count the no. of babies in the Census. b. Announce the news to the World
c. Worship the Child also. d. All of the above.

10. What did Herod really plan to do when he found Jesus?

a. Worship him. b. Bow down to him.
c. Ask him to pay Taxes. d. Kill him.


11. Why did the wise men go home by a different way?

a. Because of bad weather. b. God told them to go in a dream.
c. They discovered a short-cut. d. They followed a Star.


12. Where did God tell Joseph to take his family to escape Herod?

a. Nazareth b. Egypt c. Jerusalem d. Rome

## OUR REDEEMER IS COME!!




## THE PROMISED ONE!!



**THIS ADVENT SEASON, AS THE STAR LED THE WISE MEN, LET US HERALD THE REDEEMER TO THE WORLD!!**

## Spot the Differences in The Wise Men's Story

Compare the picture on the top with the picture on bottom. Circle the 16 things that are different.



# A CHRISTMAS STORY



### Christmas-Matthew 1:21

| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 25 | | | | 9 | | | | | 20 | | | 4 | | | | 14 | | 12 | | 10 | 24 |

_ _ E   W I _ _   _ I _ E   _ I _ _ _   _ _   _   _ _ N
11 26 25   12 9 7 7   5 9 16 25   2 9 1 21 26   21 3   23   11 3 20

_ N _   Y _ U   _ _ E   _ _   _ I _ E   _ I _   _ _ E
23 20 17   10 3 14   23 1 25   21 3   5 9 16 25   26 9 8   21 26 25

N _ _ E   _ E _ U _   _ E _ _ U _ E   _ E   W I _ _
20 23 8 25   18 25 11 14 11   2 25 13 23 14 11 25   26 25   12 9 7 7

_ _ _ E   _ I   _ E _ _ _ E   _ _ _ _   _ _ E I _
11 23 16 25   26 9   6 25 3 6 7 25   15 1 3 8   21 26 25 9 1

_ I N _
11 9 20 11

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below...

1. The theme for the month of December is:

   ________________________________________________.

2. __________________ is the perfect sacrifice for our sins.
3. According to John 3:16, what did God give? ______________________________.
4. Name one prophet from the old testament who prophesized about Jesus' birth.

   ______________________________

5. What does Luke 2:10 say - _____________________________________________

   ______________________________________________________________________




Children, as we celebrate Christmas this year, let us give thanks and remember that Jesus has redeemed us from both suffering and sin by his sacrifice on the Cross.

We belong to HIM. God bless,

**Mrs. Briliya Jeyaseelan**.

## Answers to November Children's Corner

**CHOOSE THE CORRECT OPTION – "Christian Giving" in the Bible.**

1. a. She was full of good works.
2. a. They gave donations to Lord's people
3. b. He told them to excel in giving
4. c. As much as they wanted
5. b. 2 Mites
6. a. She gave more than the rich.
7. d. God sees our sacrifice.
8. a. 1/2
9. b. 4 times the amount
10. c. They gave aid more than once
11. d. A cheerful giver
12. a. Generously

## Short Review Below…

1. The theme for the month of November is: **Christian Giving.**
2. According to 2 Corinthians 9:7 – **God loves a cheerful giver.**
3. According to John 3:16, what did God give? **His only son, Jesus.**
4. How much in total did the German preacher August H. Francke receive from the Lord, for the 1 ducat that he gave to the widow? **514 ducats.**
5. Name one thing that you could give to the Lord - **Time; Talents; Money.**

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்
## (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. ஆயிரத்தில் ஒருவர் யார்?
2. ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களோடு சம்பந்தப்பட்டவர் யார்?
3. ஆயிரத்துக்கும் அதிகமான பாட்டுகள், ஆயிரம் சர்வாங்க தகனபலிகள் சம்பந்தப்பட்டவர் யார்?
4. ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் - யார்?
5. ஆயிரம் பேருக்கு அதிபதி, அவனோடிருந்த ஜனங்களை ஆயிரத்துக்கு அதிபதியாக வைத்தான்- அவன் யார்?
6. ஆயிரம் - பதினாயிரம் என்ன? ஆயிரங்கள் - பதினாயிரங்கள் என்ன?
7. ஆயிரம் திராட்சச் செடியிருந்த நிலத்தின் மதிப்பு என்ன?
8. ஆயிரங்களுக்குள் சிறியது ஆனால் சிறியதல்ல எது?
9. ஆயிரமாவது அதிகாரம் வேதாகமத்தில் எது? அதில் கிறிஸ்துமஸ் பற்றி வரும் வசனம் என்ன?
10. ஆயிரமாவது வசனம் லூக்கா சுவிசேஷத்தில் எது?
11. ஆயிரம் பேருக்கு ஒரு பெரிய விருந்தை ஏற்படுத்தி அன்று ராத்திரியிலே கொலை செய்யப்பட்டவன் யார்?
12. ஆயிரத்துக்கும் அதிகமான வெள்ளிக்காசுக்காக பேரம் பேசப்பட்ட நபர் யார்? பேசினவர்கள் யார்? யாரிடம்?
13. ஆயிரம் வெள்ளிக்காசு யாருக்கு கொடுக்கப்பட்டது? கொடுத்தது யார்?
14. ஆயிரம் வெள்ளாடு யாருக்கு இருந்தது?
15. ஆயிரமாயிரமாய்த் திரிகிறவைகள் எவை? எங்கு?

## நவம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் எண்ணாகமம் |
|---|---|---|
| 1 | 25 ஆண்டுகள் | 8:24, 25 |
| 2 | ஓபா | 10:29 |
| 3 | எல்தாத், மேதாத் | 11:26 |
| 4 | வெட்டுக்கிளிகளைப்போல் | 13:33 |
| 5 | இஸ்ரவேல் புத்திரர் | 14:44 |
| 6 | எஸ்கோல் | 13:23 |
| 7 | இஸ்ரவேல் ஜனங்கள் | 12:15 |
| 8 | சூரியேல் | 3:33-35 |
| 9 | கமாலியேல் என்னும் மனாசே புத்திரரின் பிரபு | 7:54 |
| 10 | அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் | 2:25 |
| 11 | இஸ்ரவேல் புத்திரரில் 250 பேர் | 16:2 |
| 12 | பிஸ்கா, பேயோர் | 23:14, 28 |
| 13 | ஜனத்தின் கடைசிப் பாளயத்தை | 22:41 |
| 14 | சுவர் ஓரமாய் | 22:25 |
| 15 | ரூபனியரின் குடும்பங்களில் எண்ணப்பட்டவர்கள் | 26:7 |
| 16 | பிலேயாம் | 22:18 |
| 17 | கோகாத் | 3:27 |
| 18 | மோவாபின் குமாரத்திகள் | 25:1 |
| 19 | மனாசேயின் குடும்பங்களில் எண்ணப்பட்டவர்கள் | 26:34 |
| 20 | மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் | 27:1 |

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.*

## நவம்பர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs .Helen Sharmila Ray
2. Mrs.Sheeba Merlin
3. Mrs. D.R Ajita Ebi
4. Mrs. Subija Jino
5. Mrs .Priya Ranjith Kumar
6. Mrs. Abisha Grace Rejin
7. Mrs.Annie Max
8. Mrs. Febell Jeevagi Thomas
9. Mrs . Sharmila Rajesh
10. Mrs.Jebaseeli Asir
11. Mrs.Geetha kannan
12. Mrs.L. Jenila
13. Mrs.Sheeba Herlin
14. Mr. Jeba Jino
15. Mr.Emmanuel
16. Mr.Salin Robert
17. Mr.Ashok. S
18. Mr. Prawin Durai Sam

## Children who answered November - 2023 Quiz

1. Kevin Immanuel
2. Kavi Yalini
3. Karen Tryphena Grapeson
4. Johan Anit Manuel
5. Johan Sam Manuel
6. Linuel I.J Sherwyn
7. Leonel I.J.Stalin
8. Johanan paul
9. Joanna Paul
10. Starlyng Noble
11. Isaac
12. Jeya Joshua Mahear
13. Jerilyn Pushpam Nelson
14. Gabrilyn Hannah Nelson
15. Jehosheba
16. Joanna Irene
17. Jevlyn Ana .V
18. Camryn Robert. S
19. Galvin Robert .S
20. Jen Scudd
21. Jim Scott
22. Leona Juliet J.B
23. Adelyn Victoria Jeyaseelan
24. Aadhov Steve Matthew
25. Janessa Max
26. Johan
27. Janey Jessìca
28. Hadriel Adventier
29. Josiah
30. Liam Elijah
31. Evelyn Gracia
32. Steffi Priscilla
33. Liana Erin
34. Giana Elin
35. Clement

# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



**இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி**

**14-06-1912 – 20-01-1997**

### பெரேயா ஊழியம்

கல்லூரிப் பருவத்தில் 300 மைல்களை மிக எளிதாக சிற்றூர்தி ஓட்டுநராகக் காரில் கடந்த ஈடித்திற்கு 100மைல் பயணம் கூட அசாதாரண பலப்பரீட்சையாய்த் தோன்றியது. ஏனென்றால் அவர்கள் பயணிக்கும் கிராம சாலைகள் அவ்வளவு கரடு முரடானவைகள். சில சமயங்களில் கிராம மக்களோடு லீலாவும் பாக்கியும் சாலையில் கிடக்கும் கற்களைப் புரட்டியபடி நடந்தே சென்றனர். சில இடங்களில் கார் சகதியில் சிக்கிக் கொள்ளாதவண்ணம் ஊர்மக்கள் வழியில் கோணிப்பைகளைக் காரின் முன் விரிப்பார்களாம்.

ஊழியம் ஓங்கி வளர்ந்த இந்நாட்களில் இந்த VBS சகோதரிகளின் ஆவிக்குரிய வாழ்க்கையும் உன்னதர் தயவால் ஓங்கி வளர்ந்தது. இளஞ்சிட்டுகளாய் இவர்கள் சிறகடித்து ஒதுங்கிய இடம் தென்னிந்தியத் திருச்சபைக்குட்பட்ட திருநெல்வேலி மண்டலத்தில். திருநெல்வேலியிலுள்ள பாளையங்கோட்டையில் தலைமையகத்தை நிறுவி, நெல்லைத் திருமண்டல சபை மக்கள், பள்ளி மாணவர்களுக்கு இந்த விடுமுறை வேதாகமப்பள்ளி (VBS) சேவை செய்து வந்ததால் இது பாளையங்கோட்டை VBS அல்லது திருநெல்வேலி VBS என்றும் பெயர் பெற ஆரம்பித்தது.

VBS சகோதரிகளுக்கு தென்னிந்தியத் திருச்சபையும், நெல்லைத் திருமண்டலமும் ஐக்கியமும், ஆதரவும், அன்பும் தந்து வந்ததால் VBS சகோதரிகள் மனரம்மியமாயும், தைரியமாயும் ஊழியம் செய்தனர். 1958-ல் தென்னிந்தியத் திருச்சபையின் முறைப்பாட்டின்படி ஈடித்தும் லீலாவும் Church of South India's

Order of Sisterhood-ல் அங்கங்களாக அபிஷேகம் பெற்றனர். நீலமும் வெள்ளையுமான புடவைகளை உடுத்தினர். நீண்ட சங்கிலியில் சிலுவைச் சின்னத்தை மாலையாய்க் கழுத்தில் அணிந்தனர். ஈடித் தென்னகத் தமிழ்ப்பெண்ணாய் புடவையில் பரிமளித்த அந்நாட்களில் அவரது சுருள் கேசமும் ஈரடி இரட்டைப்பின்னலாய் நீண்டிருந்தது.

ஈடித், லீலா, பாக்கித்தாய் என்ற VBS சகோதரிகள் VBS ஊழியத்தோடு மட்டும் நின்று விடாமல் இதர ஊழியங்களிலும் பங்கேற்றனர். இவாஞ்சலிக்கல் பெல்லோஷிப் ஆஃப் இந்தியா (EFI) என்ற இயக்கத்துடன் இணைந்து ஓய்வு நாள் பாடசாலைக்குத் தேவையான பாடத்திட்டங்களை எழுதிக் கொடுத்தனர். திருச்சபையெனும் மந்தையின் மேய்ப்பர்களான போதகர்களுக்கான பிரத்தியேகமான ஒரு புத்துயிர் முகாமையும் நடத்தினர். ஹாவர்ட் ஹென்றிக் என்ற பெரிய ஊழியரைச் சுவிசேஷகராகக் கொண்டு நடத்தப்பட்ட இந்த புத்துயிர் முகாமின் சிறுதேவை முதல் பெருந்தேவை வரையிலான பணத்தேவைகளை விசுவாச அடிப்படையிலே ஜெபத்தின் பலனாய்ப் பெற்று நடத்தியதாக ஈடித் மகிழ்ந்து கூறியுள்ளார்.

ஊழியரும், உதவிக் கரம் நீட்டும் உதவி ஊழியர்களும் வளர்ந்து வந்த அந்நாட்களில் முதல் இந்திய VBS சகோதரியும் மிகக் கூரிய புத்திசாலியுமான லீலாவிற்கு மூளையில் கட்டி வந்து நோய்வாய்ப்பட்டார். அதனால் அவரை வேலூர் மருத்துவப்பணியில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதே நேரத்தில்தானே ஈடித்திற்கும் தாயகப் பயணம் செய்யவேண்டிய நேரம் வந்தது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் பாக்கித்தாயும், அப்போதுதான் VBS ஊழியத்தில் முழுநேரப் பணியில் இணைந்த டெய்சியும் வேலூரில் தங்கி லீலாவைக் கவனித்தார் எனவே ஈடித் தாயகப் பயணத்தை தள்ளிப்போடவில்லை.

அறுவை சிகிச்சைக்குப்பின் லீலா வேகமாக சுகமாகி வேலைக்குத் திரும்பினார். தாயகம் சென்ற ஈடித் குடும்பத்தினரையும் ஊழிய வாஞ்சை கொண்ட நண்பர்களையும், திருச்சபை அங்கத்தினர்களையும், விசுவாசிகளையும் சந்தித்து தென்னிந்தியக் கோடியில் வேர்பற்றி கனி தர ஆரம்பித்துள்ள VBS-ஐப் பற்றி ஆனந்தமாய்ப் பகிர்ந்து கொண்டனர். பலர் அவருடன் ஜெபித்து பரவசப்பட்டனர். சிலர் அவரிடம் ஊழியத்திற்குத் தேவையான சிறு சிறு அன்பளிப்பைத் தந்து மகிழ்ந்தனர். சில பொருட்களை ஈடித்தே நேரில் சென்றே வாங்கினார். அவைகளில் மிக முக்கியமானது இசைக்கருவி அக்கார்டியன்.

உயர்ந்த வசீகரக் குரலுடைய ஈடித் இரட்டைப் பின்னலைக் கொண்டையாகக் கட்டி, இந்தியப்பெண்ணாய் சேலையை இடையில் சொருகி, அமெரிக்கப்பெண்ணாய் காரை ஓட்டிக் கொண்டு, ஆண்டவரின் செல்லமாய் அக்கார்டினை இசைத்துப் பாடி சிறியவர், பெரியவர், போதகர், அலுவலர்கள், அதிகாரிகள், ஆசிரியர் என பலதரப்பட்டவர்களைக் கிறிஸ்துவுக்கு நேராய் வழிகாட்டிக் கொண்டே இருந்தார் அவரது ஐக்கியமும், ஊழிய வாஞ்சையும் பாக்கித்தாயையும் 1961-ம் ஆண்டு தென்னிந்தியத் திருச்சபையின் சகோதரிகளின் பாசறையில் இணையச் செய்தது.

- தொடரும்

## பாடல் பிறந்த கதை

### *நடுக் குளிர் காலம் [பாமாலை 65]*

### (In the bleak mid winter)

***நடுக் குளிர் காலம்***
***கடும் வாடையாம்***
***பனிக்கட்டி போலும்***
***குளிரும் எல்லாம்,***
***மூடுபனி ராவில்***
***பெய்து மூடவே***
***நடுக் குளிர் காலம்***
***முன்னாளே.***



ஆங்கிலக் கவிஞர் கிறிஸ்டினா [Christina Georgina Rossetti (5 December 1830 – 29 December 1894)] என்பவர் சிறுவர் கவிதைகள், பக்தி கவிதைகள் என்று பல்வேறு வகையான கவிதைகளை எழுதியவர். "Goblin Market", "Remember" போன்ற புகழ்பெற்ற கவிதைகளை எழுதிய இவரே 'In the bleak mid winter' எனும் Christmas Carol'ஐ எழுதியவரும் ஆவார். 'In the bleak mid winter' எனும் இப்பாடலை கிறிஸ்டினா ஒரு கவிதையாகவே எழுதினார். முதன்முதலில் 1872ம் ஆண்டு Scribner's Monthly எனும் பத்திரிகையின் ஜனவரி மாத இதழில் இக்கவிதை அச்சிட்டு வெளியிடப்பட்டது. 1906ம் ஆண்டு வெளிவந்த 'English Hymnal' புத்தகத்தில் இப்பாடல் இசையுடன் வெளியிடப்பட்டது. Gustav Theodore Holst எனும் இங்கிலாந்தைச் சேர்ந்த இசையமைப்பாளர் இப்பாடலுக்கான இசையை எழுதினார்.

கிறிஸ்டினாவின் தந்தையார் Gabriele Rossetti என்பவர் லண்டன் கிங்க்ஸ் கல்லூரியில் இத்தாலி மொழி பேராசிரியராக பணிபுரிந்துவந்தார். கிறிஸ்டினாவின் சகோதரர்கள் இருவர் சிறந்த ஓவியர்கள். கிறிஸ்டினாவின் குடும்பம் ஓர் அழகிய கலைக்குடும்பமாகத் திகழ்ந்தது. தனது பதினாறாவது வயதில் இருந்தே உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்த கிறிஸ்டினா, மிகுந்த பக்தியுடைய ஒரு பெண்மணியாவார். உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தனது பள்ளிப்படிப்பைத் தன் தாயாரின் உதவியுடன் வீட்டிலிருந்தபடியே பயின்றார். தன் வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்ந்த கிறிஸ்டினா, பாலியல் பெண் தொழிலாளர்களுக்கு இறைசெய்தியை அறிவித்து அவர்களை நல்வழிப்படுத்தும் ஊழியத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.

'In the bleak mid winter' போலவே கிறிஸ்டினா எழுதிய "Love Came Down at Christmas" என்ற கவிதையும் பாடல் வடிவம் பெற்றுப் பரவலாகப் பாடப்படுகிறது.

’புல்லணையின் பரவசக்காட்சியையும், பாலன் பிறந்த இரவின் அழகையும், மாட்டுக்கொட்டிலின் ஆடு மாடுகளைப் பற்றியும், கேரூபின் சேராபின் அவருக்குப் பணிவதையும், முதல் நான்கு சரணங்களில் விவரிக்கும் கிறிஸ்டினா, ஐந்தாவது சரணத்தில், அவர் வாழ்ந்த காலத்தில் நிலவிய சமூக அமைப்பினைப் பற்றி நுணுக்கமாகப் பதிவு செய்துள்ளார் என்று 1936 ஆண்டு எலிசபெத் என்ற Hymn Writer இப்பாடலைப் பற்றிய தமது ஆய்வில் குறிப்பிடுகிறார். ‘கிறிஸ்டினா வாழ்ந்த 18ம் நூற்றாண்டின் இறுதியில் பெண்களுக்கு சமூகத்தில் மறுக்கப்பட்டு வந்த கல்வியைப் பற்றி அவர் எழுதியிருக்கலாம் என்று குறிப்பிடும் எலிசபெத், ‘மேய்ப்பர்களைப் போலவே கிறிஸ்டினாவும் பெரிய வேலையின்றி இருந்தார். பொன், வெள்ளி, தூபவர்க்கத்துடன் பாலனைத் தொழவந்த ஞானிகளைப் போலவே கிறிஸ்டினாவும் முறைப்படி படித்து பட்டம் ஏதும் பெற்றிறாத ஏதுமற்ற நிலையிலும் தன் உள்ளத்தையே இயேசு பாலனுக்கு அர்ப்பணிக்கும்விதமாக,

*What can I give him,*
*Poor as I am?*
*If I were a shepherd,*
*I would bring a lamb;*
*If I were a wise man,*
*I would do my part;*
*Yet what I can I give him;*
*Give my heart.*

***ஏழை அடியேனும்***
***யாது படைப்பேன்?***
***மந்தை மேய்ப்பனாயின்***
***மறி படைப்பேன்***
***ஞானி ஆயின் ஞானம்***
***கொண்டு சேவிப்பேன்***
***யானோ எந்தன் நெஞ்சம்***
***படைப்பேன்.***

என்று எழுதியிருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். பாலன் பிறந்த இரவையும், கொட்டிலையும் விளக்குவதோடு நில்லாமல் இந்த அர்ப்பணிப்பின் சரணமானது இப்பாடலுக்கான அழகிய நிறைவாக அமைந்துள்ளது.

கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு

# ஆலய பக்கம்



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் டிசம்பர் – 2023

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | 8.15 pm – 11.00 pm | சிறுவர் கிறிஸ்மஸ் மர விழா – Community Centre |
| 3 | ஞாயிறு | 11.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் - ஆயர் இல்லம் |
| | | 2.00pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 5 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 8 | வெள்ளி | 8.45 pm – 10.15 pm | கிறிஸ்மஸ் கீத ஆராதனை ஆராதனை – St.Andrew's church |
| 10 | ஞாயிறு | 10.00 am – 11.30 am | பெண்கள் கிறிஸ்மஸ் கூடுகை - ஆயர் இல்லம் |
| 12 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 15 | வெள்ளி | 8.45 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 19 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 22 | வெள்ளி | 8.45 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 25 | திங்கள் | 5.00 am – 7.00 am | கிறிஸ்மஸ் திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 26 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 29 | வெள்ளி | 8.45 pm – 10.15pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| ஜனவரி 1 | திங்கள் | 5.00 am – 7.00 am | புது வருட திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |

## BIBLE READING FOR CHILDREN – DECEMBER 2023



| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.12.23 | ACTS | 13 : 16 - 20 |
| 2.12.23 | ACTS | 13 : 21 - 25 |
| 3.12.23 | ACTS | 13 : 26 -30 |
| 4.12.23 | ACTS | 13 : 31 - 37 |
| 5.12.23 | ACTS | 13 : 38 - 41 |
| 6.12.23 | ACTS | 13 : 42 - 47 |
| 7.12.23 | ACTS | 13 : 48 - 52 |
| 8.12.23 | ACTS | 14 : 1 - 7 |
| 9.12.23 | ACTS | 14 : 8 - 13 |
| 10.12.23 | ACTS | 14 : 14 -17 |
| 11.12.23 | ACTS | 14 : 18 - 22 |
| 12.12.23 | ACTS | 14 : 23 - 28 |
| 13.12.23 | ACTS | 15 : 1 - 5 |
| 14.12.23 | ACTS | 15 : 6 -11 |
| 15.12.23 | ACTS | 15 : 12 - 17 |
| 16.12.23 | ACTS | 15 : 18 - 22 |
| 17.12.23 | ACTS | 15: 23 - 27 |
| 18.12.23 | ACTS | 15 : 28 - 34 |
| 19.12.23 | ACTS | 15 : 35 - 41 |
| 20.12.23 | ACTS | 16 : 1 - 7 |
| 21.12.23 | ACTS | 16 : 8 - 15 |
| 22.12.23 | ACTS | 16 : 16 - 21 |
| 23.12.23 | ACTS | 16 : 22 - 28 |
| 24.12.23 | ACTS | 16 : 29 - 35 |
| 25.12.23 | ACTS | 16 : 36 - 40 |
| 26.12.23 | ACTS | 17 : 1 - 5 |
| 27.12.23 | ACTS | 17 : 6 - 11 |
| 28.12.23 | ACTS | 17 : 12 - 18 |
| 29.12.23 | ACTS | 17 : 19 - 25 |
| 30.12.23 | ACTS | 17 : 26 - 29 |
| 31.12.23 | **ACTS** | 17 : 30 -34 |



## தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - டிசம்பர் 2023

| தேதி | நாள் | காலை | மாலை | |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளி | யோசுவா 1 : 1 - 18 | 1 கொரி. | 1:1-15 |
| 2 | சனி | யோசுவா 2 : 1 - 14 | 1 கொரி. | 1:16-31 |
| 3 | ஞாயிறு | யோசுவா 2 : 15 - 24 | 1 கொரி. | 2:1-16 |
| 4 | திங்கள் | யோசுவா 3 : 1 - 17 | 1 கொரி. | 3:1-13 |
| 5 | செவ்வாய் | யோசுவா 4 : 1 - 14 | 1 கொரி. | 3:14-23 |
| 6 | புதன் | யோசுவா 4 : 15 - 24 | 1 கொரி. | 4:1-21 |
| 7 | வியாழன் | யோசுவா 5 : 1 - 15 | 1 கொரி. | 5:1-12 |
| 8 | வெள்ளி | யோசுவா 6 : 1 - 14 | 1 கொரி. | 6:1-20 |
| 9 | சனி | யோசுவா 6 : 15 -27 | 1 கொரி. | 7 : 1 - 20 |
| 10 | ஞாயிறு | யோசுவா 7 : 1 - 15 | 1 கொரி. | 7 : 21 - 40 |
| 11 | திங்கள் | யோசுவா 7 : 16 - 26 | 1 கொரி. | 8 : 1 - 13 |
| 12 | செவ்வாய் | யோசுவா 8 : 1 - 12 | 1 கொரி. | 9 : 1 - 14 |
| 13 | புதன் | யோசுவா 8 : 13 -26 | 1 கொரி. | 9 : 15 - 27 |
| 14 | வியாழன் | யோசுவா 8 : 27 - 35 | 1 கொரி. | 10 : 1 - 15 |
| 15 | வெள்ளி | யோசுவா 9 : 1 - 13 | 1 கொரி. | 10 : 16 - 33 |
| 16 | சனி | யோசுவா 9 : 14 -27 | 1 கொரி. | 11 : 1 - 16 |
| 17 | ஞாயிறு | யோசுவா 10 : 1 - 12 | 1 கொரி. | 11 : 17 - 24 |
| 18 | திங்கள் | யோசுவா 10 : 13 - 30 | 1 கொரி. | 12 : 1 - 14 |
| 19 | செவ்வாய் | யோசுவா 10 : 31 - 43 | 1 கொரி. | 12 : 15 - 31 |
| 20 | புதன் | யோசுவா 11 : 1 - 13 | 1 கொரி. | 13 : 1 - 13 |
| 21 | வியாழன் | யோசுவா 11 : 14 - 23 | 1 கொரி. | 14 : 1 - 19 |
| 22 | வெள்ளி | யோசுவா 12 : 1 - 24 | 1 கொரி. | 14 : 20 - 40 |
| 23 | சனி | யோசுவா 13 : 1 - 15 | 1 கொரி. | 15 : 1 - 11 |
| 24 | ஞாயிறு | யோசுவா 13 : 16 -32 | 1 கொரி. | 15 : 12 - 21 |
| 25 | திங்கள் | யோசுவா 14 : 1 - 15 | 1 கொரி. | 15 : 22 - 58 |
| 26 | செவ்வாய் | யோசுவா 15 : 1 - 18 | 1 கொரி. | 16 : 1 - 24 |
| 27 | புதன் | யோசுவா 15 : 19 - 63 | 2 கொரி. | 1 : 1 - 10 |
| 28 | வியாழன் | யோசுவா 16 : 1 - 10 | 2 கொரி. | 1 : 11 - 24 |
| 29 | வெள்ளி | யோசுவா 17 : 1 -18 | 2 கொரி. | 2 : 1 - 17 |
| 30 | சனி | யோசுவா 18 : 1 - 10 | 2 கொரி. | 3 : 1 - 18 |
| 31 | ஞாயிறு | யோசுவா 18 : 11 - 28 | 2 கொரி. | 4 : 1 - 18 |

## ஆராதனை பாடல்கள் - டிசம்பர் 2023



| | |
|---|---|
| **01-12-23** | |
| பாமாலை - 65 | நடு குளிர் காலம் |
| பாமாலை - 46 | இம்மானுவேலே வாரும் வாருமே |
| கீர்த்தனை – 64 | வரவேணும் எனதரசே |
| கீர்த்தனை – 320 | மங்களம் சதா மங்களம் |
| **08-12-23** | |
| பாமாலை - 72 | ராக்காலம் பெத்லேம் |
| பாமாலை | Christmas Medley |
| கீர்த்தனை – 35 & 32 | கண்டேன் என் கண் குளிர<br>ஆர் இவர் ஆராரோ |
| பாமாலை - 59 | ஒப்பில்லா திரு இரா |
| **15-12-23** | |
| பாமாலை - 66 | நள்ளிரவில் மா தெளிவாய் |
| பாமாலை - 73 | ராஜன் தாவீதூரில் |
| கீர்த்தனை – 210 | சத்திய வேதத்தை |
| கீர்த்தனை – 256 | விண்ணோர்கள் போற்றும் |
| **22-12-23** | |
| பாமாலை - 48 | கர்த்தருக்கு ஸ்தோத்திரம் |
| பாமாலை - 52 | நீர் வாரும் கர்த்தரே |
| கீர்த்தனை – 28 | சமாதானம் ஓதும் |
| பாமாலை - 54 | வாசல்களே உயர்த்துங்கள் |
| **25-12-23** | |
| பாமாலை - 71 | மெய்பக்தரே நீர் |
| பாமாலை - 62 | கேள் ஜென்மித்த |
| கீர்த்தனை – 31 | பெத்தலையில் பிறந்தவரை |
| பாமாலை - 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| **29-12-23** | |
| பாமாலை - 79 | இம்மட்டும் ஜீவன் தந்த |
| பாமாலை - 83 | நீர் தந்த நன்மை |
| கீர்த்தனை – 303 | எந்நாளுமே துதிப்பாய் |
| கீர்த்தனை – 77 | சீர் இயேசு நாதனுக்கு |

## திருமறை பாட ஒழுங்குகள் - டிசம்பர் 2023

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-12-23 | *மீட்பின் நம்பிக்கை* | செப்பனியா 3 :14 - 20 | *2 பேதுரு* 3:8 - 13 | மத்தேயு 1:18 - 25 | 43 |
| 08-12-23 | *கிறிஸ்துவின் வருகையை மகிழ்ச்சியோடு எதிர் நோக்குதல்* | எரேமியா 33:10-16 | *1 தெச.* 3:6–13 | லூக்கா 1:39 - 45 | 68:1-20 |
| 15-12-23 | *கர்த்தருடைய வார்த்தை : பாதைக்கு ஒளி* | ஏசாயா 55 :6 - 13 | கலாத்தியர் 1:11-17 | மத்தேயு 4:1 - 11 | - |
| 22-12-23 | *கடவுள் நம்மோடு* | உபாகமம் 4 :5 - 10 | அப். 18:1 – 11 | யோவான் 16:16 - 24 | - |
| 25-12-23 | *வாக்கு சதையானது (கிறிஸ்மஸ் பண்டிகை)* | சகரியா 2 : 1 - 13 | *1 யோவான்* 1:1 - 7 | யோவான் 1:1 - 14 | 27 |
| 30-12-23 | *நன்றி செலுத்த வாருங்கள்* | உபாகமம் 8 : 10 - 18 | ரோமர் 1:13–25 | லூக்கா 17:11 - 19 | 116 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக் குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 05-12-23 | சங்கீதம் | 116 | Hamdan |
| 12-12-23 | சங்கீதம் | 117 | Muroor |
| 19-12-23 | சங்கீதம் | 118 | Musaafa |
| 26-12-23 | சங்கீதம் | 119 | TCA |



# BIRTHDAY - DECEMBER




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Ms. | Kathryn Joan |
| 2 | Master | Ajay Saul |
| 2 | Mr. | Samuel Leslie |
| 3 | Ms. | Delisa |
| 5 | Master. | Hadriel Adventier |
| 5 | Mr. | Nithiya Kirubakaran. T |
| 6 | Mr. | Pravin Kumar Noah S |
| 11 | Baby | K. M. Andrea Kim |
| 12 | Baby | Katelynn Anne Berlik |
| 13 | Ms. | Dixcy Vina |
| 13 | Mrs. | Jinitha Raja |
| 14 | Mr. | Sathia Saul Raj P S |
| 14 | Mrs. | Priya Irene Elizabeth Ranjithkumar |
| 14 | Mr. | Sahaya Selvan |
| 14 | Master | Joel Abraham Danial |
| 15 | Mr. | Jebin Job. P |
| 18 | Mr. | Ebulin Rajakumar S |
| 19 | Mrs. | Kasthuri Johnson |
| 19 | Ms. | Hannah Sangeetha Paul |
| 20 | Mrs. | Sheeba Jani |
| 20 | Baby. | Gaddiel Adventier |
| 21 | Miss. | Alwina Angel P |
| 21 | Mr. | Manikandan |
| 22 | Ms. | Shiney Pricillal Samuel |
| 22 | Mr. | Abishek Naveen |
| 25 | Mr. | Prasanna Sekaran |
| 26 | Mrs. | Mary Joseph |
| 26 | Master | Abhay E |
| 29 | Mrs. | Jeniha Beeshow |
| 29 | Mr. | Thomson Gnanamam Santhosh |
| 30 | Baby. | Clifford Dave |
| 30 | Mr. | Kingsly Ambrose |

## WEDDING ANNIVERSARY - DECEMBER




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 4 | Mr. & Mrs. | Julian Christian. D |
| 9 | Mr. & Mrs. | Ebulin Rajakumar S |
| 9 | Mr. & Mrs. | Easter Rajesh |
| 11 | Mr. & Mrs. | Lipny Gilbert |
| 12 | Mr. & Mrs. | Jayaraj Robinson |
| 13 | Mr. & Mrs. | Kingsly Ambrose |
| 14 | Mr. & Mrs. | Manikandan |
| 14 | Mr. & Mrs. | Thiyagu Murugaraj |
| 18 | Mr. & Mrs. | Chris Lilian Vasantha Prince |
| 19 | Mr. & Mrs. | Berlik Jacob |
| 20 | Mr. & Mrs. | Prince Samuel |
| 21 | Mr. & Mrs. | Arul Sugirson Samuel. K |
| 22 | Mr. & Mrs. | Sam Winston |
| 22 | Mr. & Mrs. | Felix Dayamoni. I |
| 23 | Mr. & Mrs. | Denson Thangaiyan |
| 26 | Mr. & Mrs. | Madhan Kumar K |
| 27 | Mr. & Mrs. | Vino Thampiraj |
| 27 | Mr. & Mrs. | Carmel Beeshow |
| 27 | Mr. & Mrs. | Arnold A |
| 27 | Mr. & Mrs. | Jegan Mahesh |
| 28 | Mr. & Mrs. | Anti Grapeson D |
| 28 | Mr. & Mrs. | Manoj Kumar Jayaraj |
| 29 | Mr. & Mrs. | Paul Emerson Karunakaran |
| 29 | Mr. & Mrs. | David Crishanth Alexander |
| 29 | Mr. & Mrs. | Abishek Naveen |
| 30 | Mr. & Mrs. | David Paulraj. S |
| 30 | Mr. & Mrs. | Jebin Job. P |
| 30 | Mr. & Mrs. | Kins. R |



## Children's Service











CSI TAMIL PARISH- ABUDH
THEY SOWED FEILDS AND PLANTED VINEYADS THAT YIELDED A FRUITFUL HARVEST . PSALMS 107
HARVEST FESTIVAL
அறுவடை திருநாள்
உன் பொருளாலும்
உன் எல்லா விளைவின் முதற்பலனாலும்
கர்த்தரைக் கனம்பண்ணு
நீதிமொழிகள்






CSI TAMIL PARISH - ABU DHABI








CHICKEN HOTDOGS




CHICKEN SAMOSA




Merry
Christmas